# பரீட்சகரின் அறிக்கை

# AA3 பரீட்சை – 2019 யூலை

## (AA32) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

**மேலோட்டமான பார்வை :**

இவ்வினாத்தாள் 100 புள்ளிகளை உள்ளடக்கி மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது.

1. பகுதி **A** ஆனது 20 புள்ளிகளுக்காக நான்கு கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது. – **ஒவ்வொன்றுக்கும் 05 புள்ளிகள்**
2. பகுதி **B** ஆனது 30 புள்ளிகளுக்காக மூன்று கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது. – **ஒவ்வொன்றுமக்கும் 10 புள்ளிகள்**
3. பகுதி **C** ஆனது 50 புள்ளிகளுக்காக இரண்டு கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது. – **ஒவ்வொன்றுமக்கும் 25 புள்ளிகள்**

**பொதுவான கருத்துக்கள் :**

இவ்வினாத்தாளுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாத்தாளுக்கு விசேடமாக வினா இல. 05, 06, 07, 08 மற்றும் 09 இற்கு திருப்திகரமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினா இலக்கம் 01 தொடக்கம் 04 வரையான வினாக்களுக்கு சரியான விடை அளித்தமை குறைவாகவே இருந்தது.

**பகுதிரீதியான செயலாற்றுகை :**

**பகுதி A** இற்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

**பகுதி B** இற்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையானது திருப்திகரமானதாக இருந்தது.

**பகுதி C** இற்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையானது திருப்திகரமானதாக இருந்தது.

## பகுதி A

### வினா இல. 01

இவ்வினா ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணத்துடன் சேமிப்பு மற்றும் முதலீடு ஆகிய எண்ணக்கருக்களுக்கிடையிலான வேறுபாட்டைப் பரீட்சித்திருந்தது. இது ஒரு இலகுவான வினாவாக இருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் வேறுபாடுகளை எடுத்துக்காட்டாததுடன் அந்த இரண்டு சொற்பதங்களினதும் அர்த்தத்தினை அடிப்படையாகக் கொண்டு பொதுவான விடைகளை வழங்கியிருந்தனர். இது அவர்கள் பாடப்புத்தகத்தையோ, கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் விடைகள் போன்றவற்றையோ படித்திருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சரியான விடையை வழங்கியிருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

சுய கற்றல் புத்தகத்திலுள்ள சம்பந்தப்பட்ட அத்தியாயத்தை நன்கு படிக்குமாறு பரிந்துரை செய்யப்படுகிறது.

## வினா இல. 02

இவ்வினா பின்னூட்டக் கட்டுப்பாடு, முன்னூட்டக் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டையும் பின்னூட்டக் கட்டுப்பாட்டின் அனுகூலங்கள் பற்றிய அறிவையும் பரீட்சித்திருந்தது. மிகச் சில பரீட்சார்த்திகளே சரியான விடைகளை வழங்கி உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஏனையவர்கள் இவ்விரண்டையும் வேறுபடுத்துவதில் கஷ்டங்களை எதிர்கொண்டிருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- சுய கற்றல் புத்தகத்தை நன்கு வாசிக்கவும்.
- கடந்தகால வினாத்தாள்களிலுள்ள இதே வகையான வினாக்களில் பயிற்சி செய்யவும்.

## வினா இல. 03

இந்த வினாவானது **பகுதி (a)** இல் தொழிற்படு மூலதன வட்டத்திலுள்ள வியாபார வருமதிகள் சேகரிப்புக் காலத்தையும் **பகுதி (b)** இல் வருமதிகள் சேகரிப்புக் காலத்தை மேம்படுத்துவதற்கான தந்திரோபாயங்களையும் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான சூத்திரத்தை எழுதியிருந்ததுடன் சராசரி கடன்பட்டோரையும் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். எவ்வாறாயினும், அதிகளவான பரீட்சார்த்திகளால் கடன் விற்பனைகளை சரியாகக் கணிப்பிட முடியவில்லை என்பதுடன் விற்பனைக் கிரயத்தை விற்பனையாக எடுக்கவும் முடியவில்லை.

அதிகளவான பரீட்சார்த்திகள் **பகுதி (b)** இற்குச் சரியான விடையினை அளித்திருக்கவில்லை.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- விடையெழுதுவதற்கு முன்னர் வினாவைக் கவனமாக வாசிக்கவும்.
- கடந்தகால வினாத்தாள்களிலுள்ள இதே வகையான வினாக்களில் பயிற்சி செய்யவும்.
- சுய கற்றல் புத்தகத்தை நன்கு வாசிக்கவும்.

## வினா இல. 04

இவ்வினா மீள் செலுத்துகைக் காலத்தின் கணிப்பீடு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இது ஒரு இலகுவான நேரடி வினாவாகும். இவ்வினாவுக்கு விடையளித்திருந்த அதிகளவான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் காசுப் பாய்வுகளினுள் தேய்மானத்தை எடுத்தன் பின்னர் மீள் செலுத்துகைக் காலத்தைக் கணிப்பிட்டிருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

கடந்தகால வினாத்தாள்களிலுள்ள இதே வகையான வினாக்களில் பயிற்சி செய்க.

# பகுதி B

## வினா இல. 05

இவ்வினா **பகுதி (a)** இல் துல்லியமான தகவல்கள் இன்றி மூன்று தந்திரோபாயத்தினதும் எதிர்பார்க்கைப் பெறுமதியைக் கணிப்பிடுவதையும் **பகுதி (b)** இல் **WB** கம்பனியானது பொருளாதார ஆய்வு நிறுவனத்தின் சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமா என்பதன் மீதான கணிப்பீடுகளையும் பரீட்சித்திருந்தது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் வினாவின் **பகுதி (a)** இற்கு நன்றாக

விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் ஒவ்வொரு தந்திரோபாயத்திற்கு இணங்கவும் மொத்த எதிர்பார்க்கப்பட்ட பெறுமதியைக் கணித்திருக்கவில்லை என்பதுடன் சிறந்த தந்திரோபாயத்தையும் அடையாளங் கண்டிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் செய்முறைகளைக் காட்டியிருக்கவில்லை. பெரும்பாலான பரீட்சார்த்திகள் **பகுதி (b)** இற்கு விடையளித்திருக்கவில்லை.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி செய்யவும்.
- சுய கற்றல் புத்தகத்தை நன்கு வாசிக்கவும்.
- செய்முறைகளை முறையாகக் காட்டவும்.

## வினா இல. 06

இவ்வினா மூன்றடுக்குக் பாதீட்டினைத் தயாரிப்பதைக் கேட்டிருந்தது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் வருமானம், சாரதிகளின் பணிசை மற்றும் சாரதிகளின் நிலையான சம்பளம் போன்றவற்றைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர் ஆயினும் அவர்கள் மூன்று விவரணங்களினுள்ளும் பணவீக்கத்தைப் பிரயோகிப்பதற்குத் தவறியிருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி செய்யவும்.
- சுய கற்றல் புத்தகத்தை நன்கு வாசிக்கவும்.

## வினா இல. 07

இவ்வினா **பகுதி (a)** இல் மூலதன மூலங்களின் கணிப்பீடு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்ததுடன் **பகுதி (b)** இல் உரிமையாண்மை மூலதனத்திலும் பார்க்க கடன் மூலதனத்தை வழங்குவதால் ஏற்படும் அனுகூலங்களையும் பரீட்சித்திருந்தது.
சில பரீட்சார்த்திகள் கணிப்பீடுகளைச் சரியாகச் செய்திருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் பின்வரும் தவறுகளை விட்டிருந்தனர்:

(1) சரியான சூத்திரங்களைப் பிரயோகிக்கவில்லை.
(2) சாதாரண பங்குகளின் கிரயத்தைக் கணிப்பிடும்போது பங்கிலாப வளர்ச்சி மாதிரிச் சூத்திரத்தினைக் கவனத்திற் கொள்ளவில்லை.
(3) WACC இனைக் கணிப்பிடும்போது கடன் மூலதனத்தின் சந்தைப் பெறுமதி கருத்திற் கொள்ளப்படவில்லை.
(4) மூலதனக் கிரயத்தை சதவீதமொன்றாக வெளிப்படுத்தவில்லை.
(5) **பகுதி (b)** இற்கு கம்பனி முன்னோக்கில் இல்லாது வாடிக்கையாளர்களின் முன்னோக்கிலிருந்து கடன் மூலதனத்தின் அனுகூலங்களை அடையாளங் கண்டிருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி செய்யவும்.
- கோட்பாட்டு அம்சங்களுடன் இணக்கமாவதற்கு சுய கற்றல் புத்தகத்தை வாசிக்கவும்.

## பகுதி C

### வினா இல. 08

இவ்வினாவின் பகுதி **(A)** ஆனது வாங்க வேண்டுமா அல்லது உற்பத்தி செய்ய வேண்டுமா என்ற தீர்மானம் எடுப்பது பற்றிய அறிவையும் பகுதி **(B)** ஆனது நேர்கோட்டு நிரலாக்கம் பற்றிய அறிவையும் பரீட்சித்திருந்தன.

அதிகளவான பரீட்சார்த்திகள் பகுதி **(A)** இற்கும் பகுதி **(B)** இற்கும் நன்றாக விடையளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் மாத்திரமே எண்ணக்கருக்கள் பற்றி விளங்கிக்கொண்டிருக்கவில்லை.

சில பரீட்சார்த்திகள் பின்வரும் தவறுகளை விட்டிருந்தனர்:

(1) பகுதி **(A)** இல், எல்லைக் கிரயமிடல் பற்றிய போதிய அறிவின்மை

(2) தீர்மானமெடுப்பதற்காக நிலையான உற்பத்தி மேந்தலையைக் கவனத்திற்கொண்டமை

(3) பகுதி **(B)** இல், மாறிகள், நோக்கச் சார்புகள், வரையறைகள் போன்றவை வரைபட முறையில் எழுதப்பட்டிருக்காமை.

(4) நெகிழ்ச்சிப் பிரதேசம் சரியாக அடையாளங் காணப்படாமை

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- சுய கற்றல் புத்தகத்திலுள்ள சகல உதாரணங்களையும் செய்து பார்க்க.
- சகல செய்முறைகளையும் காட்டுக.
- கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி செய்க.

### வினா இல. 09

இவ்வினா **பகுதி (A)** இல் செயற்றிட்ட மதிப்பீடு பற்றிய அறிவையும், **பகுதி (B)** இல் பாதிடப்பட்ட பங்களிப்பினை உண்மையான பங்களிப்புடன் கணக்கிணக்கம் செய்வதற்கு கணிக்கப்பட்ட மற்றும் தரப்பட்ட முரண்களைப் பயன்படுத்தி தொழிற்பாட்டுக் கூற்றைத் தயாரிப்பதற்கான அறிவையும் பரீட்சித்திருந்தது.

சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவின் **பகுதி (A)** மற்றும் **பகுதி (B)** இற்கு விடையளித்து உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் **பகுதி (B)** இன் **(b)** இற்கு தொழிற்பாட்டுக் கூற்றினைச் சரியாகச் சமர்ப்பித்திருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் பின்வரும் தவறுகளை விட்டிருந்தனர்:

**<u>பகுதி (A)</u>**

(1) சில பரீட்சார்த்திகள் 4 வருடங்களுக்கான மூலதனப் படியினைக் கருத்திற் கொள்வதற்குப் பதிலாக 5 வருடங்களைக் கருத்திற் கொண்டிருந்தனர்.

(2) தேய்மானம் காசுப் பாய்வில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(3) மூலதனப் படியும் தேய்மானமும் வரி கணிப்பிடப்படும்போது சீராக்கம் செய்யப்பட்டிருக்க வில்லை.

**<u>பகுதி (B)</u>**

(1) சிலர், முரண் ஆனது பாதகமானது (A), சாதகமானது (F) எனக் குறிப்பிடவில்லை.

(2) கலவை மற்றும் விளைவு முரண்களுக்கான சரியான சூத்திரம் எழுதப்படவில்லை.

(3) கலவை முரண் கணிப்பிடப்படும்போது நியமக் கலவை / உண்மையான கலவை பிரயோகிக்கப் படுவது தொடர்பில் சரியான விளக்கம் காணப்படவில்லை.

(4) விளைவு முரண் கணிப்பிடப்படும்போது நியமப் பாவனை / மொத்தப் பாவனை பயன்படுத்தப் படுவது தொடர்பில் போதுமான விளக்கம் காணப்படவில்லை.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- மேலதிக செய்முறைகளை எப்பொழுதும் காட்டவும்.
- கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி செய்க.
- AAT ஸ்ரீ லங்காவின் சுய கற்றல் புத்தகத்தை நன்கு கற்கவும்.
- பிரயோகிப்பதற்காக, சரியான முரண் சூத்திரங்களைத் தெரிவுசெய்க.

\- - -

## பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தை விருத்தி செய்வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்

**(1)** பாடத்திட்டத்திலுள்ள முழுமையான உள்ளடக்கத்தையும் பூரணமாகப் படிப்பதுடன் ஒவ்வொரு அலகிலும் அல்லது பரப்பிலும் எதிர்பார்க்கப்படுகின்ற அறிவு மட்டம் பற்றிய ஆழமான புரிந்துணர்வினை விருத்தி செய்யவும்.

**(2)** பரீட்சார்த்திகள் வினாவைக் கவனமாகப் பல தடவைகள் வாசிக்க வேண்டும் என்பதுடன் கணிப்பீடுகளுடன் தொடர்புடைய சகல செய்முறைகளையும் தெளிவாகக் காட்டுதலும் வேண்டும்.

**(3)** வினாக்களுக்கு விடைளிக்கும்போது அதனுடன் தொடர்புடையதாக ஏதாவது எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றினைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

**(4)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்களும் சரியாக எழுதப்படுதல் வேண்டும். விடைத்தாள்களை ஒப்படைப்பதற்கு முன் வினா இலக்கங்கள் போன்றவற்றை மீளவும் பரிசோதித்தல் முக்கியமானதாகும்.

**(5)** வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும்.

**(6)** கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட விடைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துவது அறிவு, திறன்கள் மற்றும் அனுபவம் போன்றவற்றைக் கூர்மைப்படுத்துவதற்கு உதவி புரியும். உண்மையான பரீட்சை வினாத்தாள்களில் அதே மாதிரியான வினாக்கள் மீளவும் வழங்கப்படலாம் என்பதால் இது எப்பொழுதும் அனுகூலமானதாக இருக்கும்.

**(7)** **சுய கற்றல் புத்தகத்தைப்** படிப்பது அவசியமானது என்பதுடன் **சுய கற்றல் புத்தகத்திலுள்ள** உதாரணங்களைச் செய்துபார்த்து பயிற்சி பெறுவதும் முக்கியமானதாகும்.

**(8)** பாடத்துடன் சம்பந்தப்பட்ட புத்தகங்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றவற்றைப் படிப்பதுடன் சம்பந்தப்பட்ட பாடப் பரப்புடன் தொடர்புடைய ஏனைய வாசிப்புப் புத்தகங் களையும் படித்தல் வேண்டும்.

**(9)** நேர முகாமைத்துவமானது பரீட்சையின்போது மிக முக்கியமானதாகும். ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளை அவதானிப்பதன் மூலம் விடையளிப்பதற்காக ஒவ்வொரு வினாவுக்கும் செலவழிக்கக்கூடிய நேரத்தினைப் பரீட்சார்த்திகள் மதிப்பிட முடியும்.

**(10)** நல்ல தயார்படுத்தலுடனும் பரீட்சையில் சித்தியடைவதற்கான திடத்துடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

\- * * * -